[2020] 6 எஸ்.சி.ஆர். 332

மருத்துவர்.திங்குஜம் அசூபா சிங் மற்றும் பலர்

-எதிர்-

மருத்துவர். எச்.நபசந்திர சிங் மற்றும் பலர் முதலானோர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.2250-2252/2020)

ஏப்ரல் 17, 2020

மாண்புமிகு நீதியரசர் திருமதி. ஆர்.பானுமதி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு ஆர்.சுபாஷ் ரெட்டி

பணிச் சட்டம் - பணி நியமனம் - இம்பாலிலுள்ள ரீஜினல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிக்கல் சயின்சஸ் (ஆர்.ஐ.எம்.எஸ்.) ஒரு பதிவு பெற்ற கழகம், அது வடகிழக்கு இந்தியாவில் பொது சுகாதார நிறுவனங்களை நடத்தி வருகிறது - ஆர்.ஐ.எம்.எஸ் இயக்குநர் பதவிக்கு மனுக்களைக் கோரி சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் 16.08.2016 தேதியன்று விளம்பரம் வெளியிட்டது - உயர் வயது வரம்பு தளர்வுக்கு வகைக்கூறு செய்யப்படவில்லை என்றும், இந்திய மெடிக்கல் கவுன்சிலினால் (எம்.சி.ஐ) நிர்ணயிக்கப்பட்ட விஷயத்துக்கு மாறாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளவாறு 14 ஆண்டுகள் அனுபவத்திற்கான தகுதி இருக்க வேண்டும் என்றும், இயக்குநர் பதவி 14.09.2015 முதல் காலியாக உள்ளதால், காலியிடம் ஏற்பட்ட நாளில் உள்ள

ஒழுங்குமுறைகள் பொருந்தும் என்ற காரணத்தினால் விளம்பரத்தை செல்லாததாக அறிவிக்க நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன - அனைத்து மூன்று நீதிப்பேராணை மனுக்களிலும் இயக்குநர் பதவி நிரப்பப்பட மனுக்கள் கோரப்பட்ட 16.08.2016 தேதியிட்ட விளம்பரம் எதிர்க்கப்பட்டுள்ளது மற்றும் இயக்குநர் பதவிக்கு நியமனம் செய்வது குறித்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் எதிர்க்கப்படவில்லை - இருப்பினும் உயர்நீதிமன்றம், நியமன விதிகளின் செல்லுந்தன்மை குறித்து மற்றும் கழகத்தின் விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் துணை விதிகள் ஆகியவற்றின்படி விதிகள் திருத்தப்படவில்லை என்ற காண்முடிவைப் பதிவு செய்தது - மேலும் விதிகளின் சட்டதிருத்தத்திற்குப் பின்னர், பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்படவில்லை, அவ்வாறாக அவைகள் பொது செயற்களத்தில் வெளியிடப்படவில்லை என்ற காரணத்தின்பேரில் அவை செல்லாததாக்கப்பட்டது - எம்சிஐ ஒழுங்குமுறைகளில் நிர்ணயிக்கப்பட்ட அனுபவ நெறிமுறைகள் விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை, அத்தகைய ஒழுங்குமுறைகள் ஆர்ஜஎம்எஸ் இயக்குநர் பதவி நிரப்பப்படுவதில் செயல் விளைவை ஏற்படுத்தும் என உயர்நீதிமன்றம் முடிவு செய்தது - முடிவு : அது தொடர்பாக எந்த எதிர்ப்பும் இல்லாதபோது, விதிகளின் செல்லுந்தன்மையை ஆராய்வதில் உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது - கழகத்தின் துணை விதிகள் அல்லது இயக்குநர் பதவி நியமனத்திற்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் ஆகிய வகைக்கூறுகள் இல்லாத நிலையில் பொதுமக்களுக்கு அறிவிக்கை செய்யப்படாதது, அறிவிக்கையை செல்லாததாக்க காரணமாக அமையாது -

மருத்துவ கல்வி நிறுவன ஒழுங்குமுறை விதிகள், 1998-ன்படி ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதிகள் எம்சிஐ-ஆல் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, மருத்துவ கல்வி நிறுவனங்களின் இயக்குநர் பதவிக்கு பொருந்தக்கூடிய கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவம் என்பது மற்றும் கல்வி பயிற்றுவிக்கும் அங்கீகாரம் பெற்றுள்ள மருத்துவ இயக்குநர்/ மருத்துவ கண்காணிப்பாளர் பதவிகளுக்கு பொருந்தக்கூடியதிலிருந்து மாறுபட்டது - மருத்துவ கல்வி நிறுவன இயக்குநர் பதவிக்கு, மருத்துவக்கல்லூரியில் பேராசிரியர்/இணைப் பேராசிரியர்/விரிவுரையாளர் பதவியில் 10 ஆண்டு அனுபவமும், அதில் குறைந்தது 5 ஆண்டுகள் துறையின் பேராசிரியர் ஆகா இருக்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது - இருப்பினும், கல்வி பயிற்றுவிக்கும் அங்கீகாரம் பெற்றுள்ள மருத்துவ இயக்குநர்/ மருத்துவ கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு தேவையான அனுபவம் பத்து ஆண்டுகள் மட்டுமே - ஆர்ஜஎம்எஸ் என்பது மருத்துவ படிப்பை பயிற்றுவிக்கும் அங்கீகாரம் பெற்ற மருத்துவ நிறுவனம் என்பதே எதிர்மேல்முறையீட்டாளர்களின் குறிப்பிட்ட வழக்காகும் - எதிர்மேல்முறையீட்டாளர்களின் அத்தகைய நிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கையிலம் 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தில் அறிவிக்கப்பட்ட தகுதிக்கான அனுபவம் எம்சிஐ ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணானது எனக் கூற முடியாது - அதிகபட்ச வயது வரம்பு தளர்வைப் பொறுத்தவரை, அத்தகைய விலக்குகூறை வகை செய்வதற்கு பரிசீலிக்குமாறு, உரிய அதிகார அமைப்பு மற்றும் கழகத்தின் செயற்குழுவிற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது - விளம்பரத்தில்

அறிவிக்கப்படாததை தளர்த்த வகை செய்யும்பொருட்டு அத்தகைய உத்தரவை உயர்நீதிமன்றம் எவ்விதம் தந்தது என்பதைப் புரிந்து கொள்ளமுடிய வில்லை - போதுமான விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறவில்லை எனும்போது, அவ்வாறான தளர்வு குறித்த அறிவிக்கையை வெளியிடுவது பணியமர்த்துநரின் விருப்பமாக இருக்கும் அதேவேளையில், எவரும் அத்தகைய தளர்விற்கான உரிமை கோர முடியாது - தகுதிக்கான அடிப்படைக்கூறானது, பணியமர்த்துநரின் செயற்களத்தில் உள்ளது, அவ்விலக்கு கூறில் தளர்வளிப்பது குறித்து, எந்த விண்ணப்பதாரருக்கு உரிமை கோர முடியாது - உயர்நீதிமன்ற உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகளை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1. எந்த நீதிப்பேராணை மனுக்களிலும் இயக்குநர் பணி நியமனம் தொடர்பான விதிகள் எதுவும் எதிர்க்கப்படாத நிலையில், சட்டத் திருத்தத்தின்படி உயர்நீதிமன்றம் விதிகளின் செல்லுந்தன்மை குறித்து பரிசீலித்து, கழகத்தின் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளைத் தொடர்ந்து திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என முடிவு செய்துள்ளது கவனத்தில் கொள்ளப்பட்டது. விதிகளின் செல்லுந்தன்மை குறித்து எந்த எதிர்ப்பும் இல்லை என்றபோதிலும், அவ்வாறான எதிர்ப்புகள் தொழில்நுட்ப ரீதியானவை மட்டுமே என்று குறிப்பிட்டு உயர்நீதிமன்றம் அதனை புறந்தள்ளியுள்ளது என்றும், நீ.பே.மனுக்களில் உள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களான அதிகார அமைப்பின் குறிப்பிட்ட வாதமாகும். இந்நிலையில், அவ்வாறான எதிர்ப்பு தொழில்நுட்ப ரீதியானது என்று தீர்மானித்ததன் மூலம் எழுப்பப்பட்ட அத்தகைய

எதிர்ப்புகளை உயர்நீதிமன்றம் புறந்தள்ளியிருக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. உயர்நீதிமன்றத்தால் பொது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அனைத்து நீதிப்பேராணை மனுக்களிலும் 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தின் செல்லுந்தன்மை மட்டுமே எதிர்க்கப்பட்டது. அதுகுறித்து எதிர்ப்பு இல்லாதபோதும், விதிகளின் செல்லுந்தன்மை குறித்து உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது. எதுவாயினும், பணி நியமனம் தொடர்பான விதிகள், விதிகளைப் பின்பற்றித் நிறுத்தப்பட்டுள்ள மற்றும் அத்தகைய திருத்தங்கள், சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமான உரிய அதிகார அமைப்பால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதே எதிர்மேல்முறையீட்டாளர் அதிகார அமைப்பின் வழக்காகும். மேலும், திருத்தப்பட்ட விதிகளை அறிவிக்கை செய்யப்படவில்லை என்ற சங்கதி, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பரிகாரத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இவை தொடர்பாக, திருத்தப்பட்ட விதிகள் அறிவிக்கப்படாதது, பணி நியமன விதிகளின் திருத்த நடைமுறை அடித்தளத்தையே பாதிக்கக்கூடும் என்பதால், அவ்வாறாக, அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்படாவிட்டால், அதனை அமுல்படுத்த முடியாது என உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அந்த விதிகள் அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 309-ன்கீழ் இயற்றப்படவில்லை என்றும், அதனை அறிவிப்பு செய்ய ஆர்ஜஎம்எஸ் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளில் குறிப்பிட்ட வகையங்கள் இல்லையென்றும், உயர்நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட எதிர் ஆணையுறுதி ஆவணத்தில் அது ஒரு குறிப்பிட்ட வேண்டுரை என்றும், எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் வெளிப்படுகிறது. பொது நிறுவனத்தில், விதிகள்

கிடைக்கப்பெற வேண்டும் என்பது உண்மையாக இருந்தபோதிலும், இயக்குநர் பதவியில் பணி நியமனத்திற்காக வனையப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது கழகத்தின் துணை விதிகளின் விளைவானது வகையங்கள் ஏதும் இல்லாதபட்சத்தில், பொது மக்களுக்கு அது பெரிதும் அறிவிக்கப்படாத நிலையில், அவ்வறிவிப்பு செல்லத்தக்கதல்ல என்று கூறுவதற்கான காரணமாகாது.

2. "மருத்துவ நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி விதிமுறைகள் 1998" எனத் தலைப்பிடப்பட்ட (11 மார்ச் 2017 வரை திருத்தப்பட்ட) இந்திய மருத்துவக்கழகத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் நகல் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கை செய்யப்பட்டவாறு, மருத்துவ நிறுவனங்களின் இயக்குநர் பதவிக்குப் பொருந்தக்கூடிய கல்வித்தகுதி மற்றும் அனுபவம், அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையின் இயக்குநர்/மருத்துவ கண்காணிப்பாளர் பணியிடத்திற்குப் பொருந்துவதும் வேறுபட்டுள்ளது. மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் பதவிக்கு கல்வித்தகுதி தவிர, ஒரு மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்/இணைப் பேராசிரியர்/விரிவுரையாளர் ஆக 10 ஆண்டுகள் அனுபவமும் அவற்றில், 5 ஆண்டுகள் துறையின் பேராசிரியராக இருத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மருத்துவமனையின் இயக்குநர்/மருத்துவ கண்காணிப்பாளர் பதவிகளுக்காக 10 ஆண்டுகள் அனுபவம் மட்டுமே தேவைப்படுகிறது. ஆர்ஜஎம்எஸ் என்பது அங்கீகாரம் பெற்ற பயிற்சி மருத்துவமனையாகும் என்பதே எதிர்மேல்முறையீட்டாளர்களின்

குறிப்பிட்ட வழக்கு. அத்தகைய, எதிர்மேல்முறையீட்டாளர்களின் நிலைப்பாட்டின்படி, 16.08.2016 தேதியிட்டுள்ள விளம்பரத்தில் அறிவிக்கப்பட்ட தகுதிக்கான அனுபவம், இந்திய மருத்துவக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணானது என்று அதில் கூற முடியாது. அதிகபட்ச வயது வரம்பின் தளர்வைப் பொறுத்தவரை, நீ.பே.மனுக்களில் உள்ள மனுதாரர்களில் ஒருவரால் கோரப்பட்டது தொடர்பாக, அத்தகைய விலக்குக்கூறை வகை செய்வதற்கு பரிசீலிக்குமாறு, கழகத்தின் செயற்குழுவிற்கும், உரிய அதிகார அமைப்பிற்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விளம்பரத்தில் அறிவிக்கப்படாத தளர்வை அளிக்க அத்தகைய உத்தரவை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்க முடியும் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. போதுமான விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாதபோது தளர்வு குறித்த அத்தகைய இன்றியமையாக்கூறை பணியமர்த்துனர் அறிவிக்கும் அதே வேளையில், அத்தகைய தளர்வை எவரும் உரிமையாகக் கோரமுடியாது. தகுதிக்கூறு என்பது பணியமர்த்துனரின் செயற்களத்திற்குட்பட்டது மற்றும் அவ்விலக்கு கூறில் தளர்வளிப்பது குறித்து எந்த விண்ணப்பதாரரும் உரிமை கோரமுடியாது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.2250-2252/2020.

இம்பாலிலுள்ள மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் நீ.பே.ம.(உ) எண்கள்.676/2016, 722/2016 மற்றும் 766/2016-இல் 28.03.2017 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.2253-2255/2020.

மேல்முறையீட்டாளர்களுக்காக - சஞ்சய் ஹெக்டே, மூத்த வழக்குரைஞர்,ப்ரீதம் சிங், எஸ். கௌதமன், ஜி. பாலாஜி, ராஜீவ் சர்மா, செல்வி. ராதாலட்சுமி ஆர்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக - மருத்துவர். ராஜீவ் தவான், அஜித் குமார் சின்ஹா, மூத்த வழக்குரைஞர்கள், செல்வி. பூனம் குமாரி, அப்துல் ரஹ்மான் தம்போலி, சித்தி பாடியா, அப்துல் அஸீம் கலேபுத்தே, ஏ. ரோஹன் சிங், விவேக் குமார் மிஹிர், விஜய் பிரகாஷ், செல்வி. நுபுர் சர்மா, அம்ரிஷ் குமார் சர்மா, ஜி.எஸ். மாக்கர்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு ஆர்.சுபாஷ் ரெட்டி அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இம்பாலிலுள்ள மணிப்பூர் உயர்நீதிமன்றத்தால் நீ.பே.ம.(உ) எண்.676/2016; நீ.பே.ம.(உ) எண்.722/2016; மற்றும் நீ.பே.ம.(உ) எண்.766//2016-ல் வழங்கிய 27.03.2017 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவால் மனக்குறையுற்று இந்த உரிமையியல் மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்சொன்ன தீர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம், இம்பாலிலுள்ள ரீஜினல் மெடிக்கல் சயின்ஸ் இன்ஸ்டிடியூட்-ல் உள்ள இயக்குநர் காலி பணியிடத்தை நிரப்ப மனுக்களை கோரி வெளியிட்ட 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தை உயர்நீதிமன்றம் செல்லாததாக்கிவிட்டது.

3. இம்பாலிலுள்ள ரீஜினல் மெடிக்கல் சயின்சஸ் (இனி ஆர்ஜஎம்எஸ் என குறிப்பிடப்படும்) என்பது, கழகங்கள் பதிவுச் சட்டம், 1860-ன்கீழ் 1975-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கழகமாகும். மேற்சொன்ன கழகம், தொடக்கத்தில் 'நார்த் ஈஸ்டர்ன் ரீஜினல் மெடிக்கல் காலேஜ்' என்று பதிவு செய்யப்பட்டு, மீண்டும் அதன் பெயர், ரீஜினல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிக்கல் சயின்சஸ் (ஆர்ஜஎம்எஸ்) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு மறுபதிவு செய்யப்பட்டது. வடகிழக்கு இந்தியப் பகுதியில் பெரிய பொது சுகாதார நிறுவனத்தை மேற்சொன்ன நிறுவனம் நடத்தி வந்தது. ஆர்ஜஎம்எஸ்-ன் நடவடிக்கைகள், ஆர்ஜஎம்எஸ்-ன் அமைப்பாவணம் (எம்ஓஏ), விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளின்படி கட்டுப்படுத்தப்பட்டு, முறைப்படுத்தப்படுகிறது.

4. ஆர்ஜஎம்எஸ்-ன் இயக்குநர் பதவியில் கடைசியாக டாக்டர். எஸ். சேகர்ஜித் சிங் இருந்தார் மற்றும் அந்த இடம் 14.09.2015-ல் காலியானது. அதுமுதல், அவ்வப்போது பொறுப்பு அடிப்படையில் இயக்குநர் பதவி இன்ஸ்டிடியூட்டின் மூத்த பேராசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. நேரடி பணி நியமனம் மூலம், இம்பாலிலுள்ள, ஆர்ஜஎம்எஸ் இயக்குநர் பதவி நிரப்பப்பட, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் முதன்முதலில் 24.06.2015 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்சொன்ன விளம்பரத்தில், உயர்ந்தபட்ச வயது வரம்பு 50 ஆண்டுகள் என்றும், அரசுப் பணியாளர்கள்/ஆர்ஜஎம்எஸ் அதிகாரிகள் மற்றும் குறிப்பாக தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தளர்வளிக்கப்படும் என்றும், ஓய்வு பெறும் வயது 62 ஆண்டுகள் என்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டது. ஓய்வு பெறும் வயதை 62-லிருந்து

65 ஆண்டுகளாக மாற்றக்கோரி, நீ.பே.ம.(உ) எண்.676/2016-ன் மனுதாரர்கள் மற்றும் பலர் 01.07.2015-ல் இந்திய அரசு சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்திற்கு மனுக்கள் அனுப்பியுள்ளனர். நீ.பே.ம.(உ) எண்.676/2016-ன் மனுதாரர்கள் அனைவரும் 62 வயதை பூர்த்தி செய்துள்ளனர் அல்லது 62 வயதை எட்டுபவர்கள். அவர்கள் மீண்டும், 8.07.2015 மற்றும் 16.07.2015 அன்று மனுக்களை சமர்ப்பித்துள்ளனர். எவ்வித நேர்மறையான பதிலை பெறத்தவ றி விட்டதால், உயர்த்தப்பட்ட வயது வரம்பை 60 ஆக நிர்ணயித்து ஆர்ஜஎம்எஸ்-ன் விதி மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் சட்டக் கூறிற்கு இணங்க, இயக்குநர் பணியிடத்தை நிரப்ப எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிட்டு விளம்பரத்தை செல்லாததாக்கி உத்தரவிடக்கோரி நீ.பே.ம.(உ) எண்.617/20158-ஐ தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்தை அணுகினர். மேற்சொன்ன, நீ.பே.மனுவில் சில இடைக்கால உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன, ஆனால், இதற்கிடையில் ஓய்வூதிய வயதை 65 என மத்திய அரசு, சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் இசைவினைப் பெற்று ஆர்ஜஎம்எஸ் இயக்குநரால் அலுவலக குறிப்பாணை எண்.B/1734/96-ஆர்ஜஎம்எஸ் (பிடி-I) 20.04.2016 தேதியன்று வெளியிடப்பட்டது. மேற்சொன்ன நீ.பே. மனு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஓய்வு வயது 65 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டதன் காரணமாக அரசு ஊழியர்கள்/ஆர்ஜஎம்எஸ் அதிகாரிகளுக்கு தகுதிக்கான அடிப்படைக்கூறில் தளர்வளிக்காமல் அதிகபட்ச வரம்பு 62 ஆக நிர்ணயித்து 16.08.2016 தேதியன்று மற்றுமொரு விளம்பரத்தை வெளியிட்டது.

5. இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி, இந்திய அரசு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் 16.08.2016 அன்று புதிதாக விளம்பரம் வெளியிட்டபோது, மேற்சொன்ன அறிவிப்பில், அதிகபட்ச வயது வரம்பிற்கான தளர்வு அளிக்கப்படவில்லை என்ற முக்கிய காரணத்தின்பேரில், மணிப்பூர் உயர்நீதிமன்றம் முன்பு, நீ.பே.ம.(உ) எண்.676/2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறாக, அதிகபட்ச வயது வரம்பிற்கான தளர்வு அளிக்கப்படாமல் இருப்பதால், 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தை செல்லாததாக்கும்படி கோரியும் அதனுடன், தேர்வு நடைமுறையில் பங்கேற்க மனுதாரர்களை அனுமதிக்கவும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தொடர்ந்து உத்தரவிடவும் மேற்சொன்ன நீதிப்பேராணை மனுவில் கோரப்பட்டுள்ளது. தகுதிக்கான அனுபவம் இந்திய மருத்துவக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விசயத்திற்கு முரணானது, 16.08.2016 தேதியன்று வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, அனுபவ தகுதியின் அடிப்படையின் பேரில், அதே விளம்பரத்தை வினவி, ஆர்ஜஎம்எஸ்-ல் பணியாற்றும் மற்றுமொரு பேராசிரியர் நீ.பே.ம.(உ) எண்.722/2016-ஐ தாக்கல் செய்துள்ளார். இந்திய மருத்துவக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படைக் கூறின்படி, இயக்குநர் பதவி வகிக்க, ஒருவர், பேராசிரியர்/இணைப்பேராசிரியர்/விரிவுரையாளர் ஆக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவமும் அதில் குறைந்தது ஐந்தாண்டுகாலம் துறையின் பேராசிரியராக இருத்தல் வேண்டும் என நீ.பே. மனுவில் வாதிடப்பட்டது. மேற்படி தகுதிக்கூறு குறித்து அறிவிப்பதற்குப் பதிலாக பேராசிரியர் ஆக பயிற்றுவிப்பதற்கு 5 ஆண்டு அனுபவம் என்ற நிபந்தனையின்றி, 14 ஆண்டுகள்

அனுபவத்தை மட்டுமே எதிர்மேல்முறையீட்டாளர் அறிவித்துள்ளனர் என்பதே அவர்களது மனக்குறையாகும். மேற்படி நீ.பே.மனுவில், கோரப்பட்ட நிவாரணம் 16.08.2016 தேதியன்று வெளியிடப்பட்ட அறிவிக்கையை செல்லாததாக்குவதே மற்றும் இந்திய அரசு சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் இந்திய மருத்துவக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களால் வகுத்துரைக்கப்பட்டுள்ளவாறு அனுபவத்தை நிர்ணயித்து அதனை புதிதாக மறுஅறிவிக்கை செய்யம்படி கோரப்பட்டது.

6. 14.09.2015 அன்று இயக்குநர் பணியிடம் காலியாயிற்று, அதனால், அந்தப் பணியிடம் காலியான நாளன்று அதன் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின்படி, அப்பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்ற வாதத்தை குறிப்பிட்டு விளம்பரத்தை எதிர்த்து பேராசிரியராகப் பணியாற்றும் மற்றுமொரு விண்ணப்பதாரர் நீ.பே.ம.எண்.(உ) 766/2016-ஐ தாக்கல் செய்தார். 24.06.2015 மற்றும் 16.08.2016 தேதிகளில் வெளியிடப்பட்ட விளம்பரத்தால் இயக்குநர் பணியிடத்திற்கு விண்ணப்பித்த மனுதாரகளில் அவரும் ஒருவர் ஆவார். இரு விளம்பரங்கள் தொடர்பாக அவர் மனு தாக்கல் செய்திருந்தாலும், 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தின்படி, இயக்குநர் பணிநியமனத்தை முறைப்படுத்தும் விதிகள், 24.06.2015 தேதியிட்ட விளம்பரத்தில் உள்ள விதிகளை விட மறுபட்டுள்ளதை அவர் கருத்தில் கொண்டார் என்பதே நீ.பே.மனு தாக்கல் செய்வதற்கான காரணமாகும். 14.09.2015 தேதியன்று பணியிடம் காலியாக உள்ளதால், பணியிடம் காலியான நாளன்று நடைமுறையில் இருந்த விதிகளை அப்பணியிடத்தை நிரப்புவதற்கு பயன்படுத்த வேண்டுமே தவிர, திருத்தப்பட்ட விதியை அல்ல என்பதே தனிப்பட்ட மமனுதாரரின்

வழக்காகும். தற்செயலாக, கழகத்தின் விதிகள் மற்றும் துணை விதிகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ள உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல், விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வாதுரைக்கப்பட்டது.

7. இவ்வனைத்து நீ.பே.மனுக்களிலும், கோரப்பட்ட பரிகாரத்தை எதிர்த்தும், பல்வேறு குற்றச்சாட்டுகளை மறுத்தும் பதில் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது.

8. இயக்குநர் பதவி நிரப்பப்பட மனுக்களை கோரும் 16.08.2016 தேதியிட்ட விளம்பரம், இம்மூன்று நீ.பே.மனுக்களில் எதிர்க்கப்பட்டாலும் இயக்குநர் பதவி நியமனம் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் எதிர்க்கப்படவில்லை; இருப்பினும், உயர்நீதிமன்றம் பணி நியமன விதிகளின் செல்லுந்தன்மையை கருத்தில்கொண்டும், கழகத்தின் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளின்படி, விதிகள் திருத்தப்படவில்லை என்ற காண்முடிவைப் பதிவு செய்தது. மேலும் விதிகளின் சட்ட திருத்தத்திற்குப் பின்னர், பொது மக்களுக்கு சென்றடையும் வகையில் அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்படவில்லை, அவ்வாறாக அவைகள் பொது செயற்களத்தில் பதிவ செய்யப்படவில்லை என்ற காரணத்தின்பேரில், அவை செல்லாததாக்கப்பட்டது. இந்திய மருத்துவக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளில் வரையறுக்கப்பட்ட தேவையான தகுதிக் கூறுகள் விளம்பரத்தில் வரையறுக்கப்படவில்லை என்றும், அத்தகைய ஒழுங்குமுறை விதிகளில் ஆர்ஜஎம்எஸ் இயக்குநர் பணியிடத்தை நிரப்புவதற்கு கட்டுப்படுத்தும் விளைவினை கொண்டது

என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்தது. இதன்விளைவாக, இங்குள்ள நீ.பே. மனுதாரரால் கோரப்பட்டுள்ளவாறு அதிகபட்ச வயது வரம்பு அல்லது கல்வித்தகுதி தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள தளர்வை பரிசீலிக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படுகிறது.

9. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சஞ்சய் ஆர். ஹெக்டே மற்றும் ஆர்ஜஎம்எஸ் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் டாக்டர். ராஜீவ் தவான் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டும், எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மற்றும் பதிவுருக்களில் உள்ள பதிவாவணங்களையும் பார்வையிட்டோம்.

10. நாங்கள் மேலும் விவாதிப்பதற்கு முன்பு, இந்நீதிமன்றத்தால் 07.05.2018 மற்றும் 24.07.2018 தேதிகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால உத்தரவுகளை குறித்துக்காட்டுவது பொருத்தமானது என கருதுகிறோம். 07.05.2018 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் சிறப்பு அனுமதி மனுக்களின் முடிவுக்குட்பட்டு உத்தரவு நாளில் நடைமுறையில் உள்ள பணி நியமன விதிகளின் வரையறையின்படி, ஆர்ஜஎம்எஸ் இயக்குநர் பதவிக்கான தேர்வு நடத்த எதிர்மேல்முறையீட்டாளர்களான அதிகார அமைப்பிற்கு இந்நீதிமன்றம் அனுமதித்துள்ளது. 24.07.2018 தேதியிட்ட மேலும் ஒரு உத்தரவின் மூலம் சிறப்பு அனுமதி மனுவின் விளைவிற்குட்பட்டு தேர்வு முடிவை அறிவித்து, பணி தெரிவை இறுதி செய்து தற்காலிகமாக பணி நியமனம் செய்யும்படியும், உரிய அதிகாரிகளுக்கு இந்நீதிமன்றம் அனுமதி வழங்குகிறது.

11. வாதங்களின்போது, இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மேற்சொன்ன இரு உத்தரவுகளின்படி தேர்வு நடைமுறை முடிக்கப்பட்டு, டாக்டர். அஹந்தீம் சாந்தா சிங், ஆர்ஜஎம்எஸ் இயக்குநராக, 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தின் வரையறைகளின்படி தற்போதைய மேல்முறையீடுகளின் முடிவிற்குட்பட்டு, 05.10.2018-ல் நியமிக்கப்பட்டார் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அது இந்நீதிமன்றத்தில் நீ.பே.ம.எண்.1181/2018 மூலம் பின்னிட்டு எதிர்க்கப்பட்டது, மேலும் அது பரிசீலிக்கப்படுவதற்காக நிலுவையில் உள்ளது.

12. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டும், உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான பொது உத்தரவையும், பதிவுருக்களில் உள்ள பதிவாவணங்களையும் நாங்கள் கவனமாகப் பார்வையிட்டோம்.

13. ஆரம்பத்தில், எந்த நீதிப்பேராணை மனுக்களிலும் இயக்குநர் பணி நியமனம் தொடர்பான விதிகள் எதுவும் எதிர்க்கப்படாத நிலையில், சட்டத் திருத்தத்தின்படி உயர்நீதிமன்றம் விதிகளின் செல்லுந்தன்மை குறித்து பரிசீலித்து, கழகத்தின் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளைத் தொடர்ந்து திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என முடிவு செய்துள்ளது கவனத்தில் கொள்ளப்பட்டது. விதிகளின் செல்லுந்தன்மை குறித்து எந்த எதிர்ப்பும் இல்லை என்றபோதிலும், அவ்வாறான எதிர்ப்புகள் தொழில்நுட்ப ரீதியானவை மட்டுமே என்று குறிப்பிட்டு உயர்நீதிமன்றம் அதனை புறந்தள்ளியுள்ளது என்றும், நீ.பே.மனுக்களில் உள்ள

எதிர்மேல்முறையீட்டாளர்களான அதிகார அமைப்பின் குறிப்பிட்ட வாதமாகும். இந்நிலையில், அவ்வாறான எதிர்ப்பு தொழில்நுட்ப ரீதியானது என்று தீர்மானித்ததன் மூலம் எழுப்பப்பட்ட அத்தகைய எதிர்ப்புகளை உயர்நீதிமன்றம் புறந்தள்ளியிருக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. உயர்நீதிமன்றத்தால் பொது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அனைத்து நீதிப்பேராணை மனுக்களிலும் 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தின் செல்லுந்தன்மை மட்டுமே எதிர்க்கப்பட்டது. அதுகுறித்து எதிர்ப்பு இல்லாதபோதும், விதிகளின் செல்லுந்தன்மை குறித்து உயர்நீதிமன்றம் பிழை புரிந்துள்ளது என்றே நாங்கள் கருதுகிறோம். எதுவாயினும், பணி நியமனம் தொடர்பான விதிகள், விதிகளைப் பின்பற்றித் நிறுத்தப்பட்டுள்ள மற்றும் அத்தகைய திருத்தங்கள், சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமான உரிய அதிகார அமைப்பால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதே எதிர்மேல்முறையீட்டாளர் அதிகார அமைப்பின் வழக்காகும். மேலும், திருத்தப்பட்ட விதிகளை அறிவிக்கை செய்யப்படவில்லை என்ற சங்கதி, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பரிகாரத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இவை தொடர்பாக, திருத்தப்பட்ட விதிகள் அறிவிக்கப்படாதது, பணி நியமன விதிகளின் திருத்த நடைமுறை அடித்தளத்தையே பாதிக்கக்கூடும் என்பதால், அவ்வாறாக, அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்படாவிட்டால், அதனை அமுல்படுத்த முடியாது என உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அந்த விதிகள் அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 309-ன்கீழ் இயற்றப்படவில்லை என்றும், அதனை அறிவிப்பு செய்ய ஆர்ஜஎம்எஸ் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளில் குறிப்பிட்ட

வகையங்கள் இல்லையென்றும், உயர்நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட எதிர் ஆணையுறுதி ஆவணத்தில் அது ஒரு குறிப்பிட்ட வேண்டுரை என்றும், எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் வெளிப்படுகிறது. பொது நிறுவனத்தில், விதிகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பது உண்மையாக இருந்தபோதிலும், இயக்குநர் பதவியில் பணி நியமனத்திற்காக வனையப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது கழகத்தின் துணை விதிகளின் விளைவானது வகையங்கள் ஏதும் இல்லாதபட்சத்தில், பொது மக்களுக்கு அது பெரிதும் அறிவிக்கப்படாத நிலையில், அவ்வறிவிப்பு செல்லத்தக்கதல்ல என்று கூறுவதற்கான காரணமாகாது.

14. 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட தகுதிக்கான அனுபவம் என்பது இந்திய மருத்துவக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளோடு ஒத்துப்போகவில்லை என்பதை உயர்நீதிமன்றம் கவனித்துள்ளது. உயர்நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட பதில் ஆணையுறுதி ஆவணத்தில், அத்தகைய குற்றச்சாட்டை மறுக்கும்போது, 16.08.2016 தேதியிட்ட விளம்பரத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளவாறு தகுதி மற்றும் அனுபவம், இந்திய மருத்துவக் கழகத்தால் வனையப்பட்ட "மருத்துவ நிறுவனங்கள் ஒழுங்குமுறை விதிகள், 1998-ல் உள்ள ஆசிரியருக்கான குறைந்தபட்ச தகுதிகளுடன்" (அவ்வப்போது திருத்தப்பட்டவாறு) ஒத்துப்போகிறது என வாதிடப்பட்டது. ஆர்ஜஎம்எஸ், மணிப்பூர் பல்கலைக்கழகத்தின் கீழ் அங்கீகாரம் பெற்றுள்ளதால், அங்கீகாரம் பெற்றுள்ள மருத்துவமனையின் இயக்குநருக்காக இந்திய மருத்துவக் கழகத்தால்

நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் பொருத்தப்படவேண்டும் என்பது எதிர்மேல்முறையீட்டாளரான அதிகார அமைப்புகளின் குறிப்பிட்ட வாதமாகும். இது தொடர்பாக முறையான வாதம் இல்லையென்ற காரணத்தினால் அவ்வாதம் உயர்நீதிமன்றத்தால் ஏற்கப்படவில்லை. "மருத்துவ நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி விதிமுறைகள் 1998" எனத் தலைப்பிடப்பட்ட (11 மார்ச் 2017 வரை திருத்தப்பட்ட) இந்திய மருத்துவக்கழகத்தால் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் நகல் எங்கள் முன் வைக்கப்பட்டது. அந்த ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கை செய்யப்பட்டவாறு, மருத்துவ நிறுவனங்களின் இயக்குநர் பதவிக்குப் பொருந்தக்கூடிய கல்வித்தகுதி மற்றும் அனுபவம், அங்கீகாரம் பெற்ற மருத்துவமனையின் இயக்குநர்/மருத்துவ கண்காணிப்பாளர் பணியிடத்திற்குப் பொருந்துவதும் வேறுபட்டுள்ளது. மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் பதவிக்கு கல்வித்தகுதி தவிர, ஒரு மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்/இணைப் பேராசிரியர்/விரிவுரையாளர் ஆக 10 ஆண்டுகள் அனுபவமும் அவற்றில், 5 ஆண்டுகள் துறையின் பேராசிரியராக இருத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மருத்துவமனையின் இயக்குநர்/மருத்துவ கண்காணிப்பாளர் பதவிகளுக்காக 10 ஆண்டுகள் அனுபவம் மட்டுமே தேவைப்படுகிறது. ஆர்ஜஎம்எஸ் என்பது அங்கீகாரம் பெற்ற பயிற்சி மருத்துவமனையாகும் என்பதே எதிர்மேல்முறையீட்டாளர்களின் குறிப்பிட்ட வழக்கு. அத்தகைய, எதிர்மேல்முறையீட்டாளர்களின் நிலைப்பாட்டின்படி, 16.08.2016 தேதியிட்டுள்ள

விளம்பரத்தில் அறிவிக்கப்பட்ட தகுதிக்கான அனுபவம், இந்திய மருத்துவக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு முரணானது என்று அதில் கூற முடியாது. அதிகபட்ச வயது வரம்பின் தளர்வைப் பொறுத்தவரை, நீ.பே.மனுக்களில் உள்ள மனுதாரர்களில் ஒருவரால் கோரப்பட்டது தொடர்பாக, அத்தகைய விலக்குக்கூறை வகை செய்வதற்கு பரிசீலிக்குமாறு, கழகத்தின் செயற்குழுவிற்கும், உரிய அதிகார அமைப்பிற்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. விளம்பரத்தில் அறிவிக்கப்படாத தளர்வை அளிக்க அத்தகைய உத்தரவை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்க முடியும் என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. போதுமான விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாதபோது தளர்வு குறித்த அத்தகைய இன்றியமையாக்கூறை பணியமர்த்துனர் அறிவிக்கும் அதே வேளையில், அத்தகைய தளர்வை எவரும் உரிமையாகக் கோரமுடியாது. தகுதிக்கூறு என்பது பணியமர்த்துனரின் செயற்களத்திற்குட்பட்டது மற்றும் அவ்விலக்கு கூறில் தளர்வளிப்பது குறித்து எந்த விண்ணப்பதாரரும் உரிமை கோரமுடியாது.

15. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில், நாங்கள் இம்மேல்முறையீடுகளை அனுமதித்தும், இம்பாலிலுள்ள மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் நீ.பே.ம.(உ)எண்.676/2016; நீ.பே.ம.(உ)எண்.722/2016; மற்றும் நீ.பே.ம.(உ)எண்.766/2016-ல் 27.03.2017 தேதியன்று வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான பொது தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்கிறோம். இதன்விளைவாக, மேற்சொன்ன, நீதிப்பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகிறது.

உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.2253-2255/2020

(சி.அ.மனு (உ) எண்கள்.4853-4855/2019-லிருந்து எழுகிறது)

16. அனுமதி வழங்கப்பட்டது.

17. இந்த உரிமையியல் மேல்முறையீடுகள், 16.08.2016 தேதியில் வெளியிட்ட விளம்பரத்தை செல்லாததாக்கி பிறப்பிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் அதே உத்தரவை எதிர்த்து இந்திய அரசு மற்றும் ஆர்ஜஎம்எஸ்-ஆல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன காரணங்களுக்காக, சி.அ.மனு(உ)எண்கள்.15093/15095/2017-லிருந்து எழுந்த மேல்முறையீடுகளை பரிசீலிக்கும்போது இம்மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன மற்றும் உயர்நீதிமன்றத்தின் மேற்சொன்ன எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".